DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.44/2024**
Prosecution witness **PW.8 (LW.10)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Doctor Sathya Priya | Caste | : | |
| Father Name | : | Selvaraj | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 40 |
| Time | : | | | | |

**(Personal appeared of accused dispensed. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **17.06.2026**

**17.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் குன்னூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது கடந்த 31.03.2015 ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் பணியில் இருந்த போது 22 வயதுமிக்க கிஷோர் என்பவரை தனது தோழர் ராமதாஸ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அப்போது அவர் தன்னை அடையாளம் தெரியாத ஆறு நபர்கள் கையால் அடித்ததாக அன்றைய தேதியில் இரவு 07.00 மணியளவில் சேலாஸ் பஜாரில் வைத்து அடித்ததாக கூறினார்.

2. அவரை பரிசோதித்ததில் அவர் தனது வலது கையில் வலி இருப்பதாகவும் நெஞ்சு வலி இருப்பதாகவும் கூறினார். அவரை பரிசோதித்து பார்த்ததில் வலது கையில் 10 x 3 x 2 cm அளவில் கிழிந்த காயமும், அவரது மார்பின் முன்பகுதியின் அனைத்து இடங்களிலும் வலி இருந்தது. அவரது காயங்களுக்கு தையலிட்டு சிகிச்சையளித்தோம். பின்னர் மேல்சிகிச்சைக்காகவும் எலும்பு மருத்துவரின் சிறப்பு கருத்துரைக்காகவும் ஊட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் நோயாளி ஊட்டி அரசு மருத்துவமனையில் எந்தவொரு சிகிச்சையும் பெறாமல்

தன்னிச்சையாக மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டார். அதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து என்னால் கருத்துரை வழங்க இயலாது என்று சான்றிதழ் வழங்கினேன். நான் தான் விபத்து பதிவேடு பதிவு செய்தேன் (**அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. ஒருவர் தடுமாறி கீழே விழும் போது மார்பு மீதும் கையில் ஆணியோ கம்பியோ கிழித்தாலும் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நோயாளி மார்பில் வலி இருப்பதாக பொய்யாக கூட கூறியிருக்கலாம் என்றால் சரிதான். இந்த சமயத்தில் சேலாஸில் சம்பவம் நடந்ததாக கூறி வேறு நபர்கள் யாராவது சிகிச்சைக்கு என்னிடம் சேர்ந்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.